புதிய தண்டனைச் சட்டத்தின் கீழ் - மருத்துவச் சிகிச்சையில் ஏற்படும் தவறுகளுக்காக

மருத்துவர்களை சிறையில் அடைக்கும் தண்டனைப் பிரிவுகளை நீக்குக!

ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 10-

புதிய தண்டனைச் சட்டத்தின் கீழ் மருத்துவர்களை, மருத்துவ சிகிச்சையில் ஏற்படும் தவறுகளுக்காக சிறையில் அடைக்கும் தண்டனைப் பிரிவுகளை நீக்குக எனக்கோரி, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:

ஒன்றிய அரசு பாரதீய நயாய சங்ஹீதா என்று புதிய தண்டனைச் சட்டத்தை (இந்தியன் பீனல் கோடுக்கு பதிலாக) 1.07.2024 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தப் புதிய சட்டத்தின் 106வது பிரிவின்படி எவரேனும் கவனக்குறைவாக அல்லது அவசரமாகவே செய்யும் செயல், ஒருவது உயிரிழப்பிற்குக் காரணமானால் அவர்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை, மற்றும் அபராதமும் வழங்கப்படும் எனவும், இதுபோன்ற கவனக்குறைவான முறையில் மருத்துவ சிகிச்சை வழங்கும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் செயலால், நோயாளிகளுக்கு உயிரிழப்பு ஏற்பட்டால், அம்மருத்துவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் தேசிய மருத்துவக் கமிஷன் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள மருத்துவர்களுக்கு இச்சட்டத்தின்படி சிறைத்தண்டனை வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே வழக்கத்தில் இருந்த இந்திய தண்டனைச் சட்டத்தின் (இந்தியன் பீனல் கோடு) பிரிவு 304.A வின் படி மருத்துவர்களுக்கு 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது அபராதம் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் மூலம் மருத்துவர்கள், சிகிச்சையின் போது செய்யும் கவனக்குறைவான செயல்களுக்கு அதே தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

மேலும் இந்நிலையில் பாராளுமன்றத்தில் நீங்கள் பேசும்போது, மருத்துவர் சிகிச்சை வழங்கும் போது ஏற்படும் மரணம் என்பது கொலை என்று சொல்ல முடியாது என்று கூறியதை உங்களுக்கு நினைவுறுத்துகின்றேன், அப்போது நீங்கள் வழங்கிய உறுதிக்கு மாறாக கூறப்பட்டுள்ளது நியாயமாகுமா?

உலகெங்கும் ஜூலை 1ஆம் நாள் மருத்துவர் தினமாக அனுசரிக்கப்படுகிறது, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள பா.ஜ.க அரசு

இந்த சட்டத்தை இந்த ஆண்டு ஜூலை 1ஆம் நாளிலிருந்து அமல்படுத்தி மருத்துவர்களுக்கு இப்போது பிரச்சினையை வழங்குகின்றதா?

சமீபத்தில் கோவிட் பெருந்தொற்று ஏற்பட்ட போது தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கிய போது, எத்தனை மருத்துவர்கள் தங்கள் இன்னுயிரை இழந்தனர் என்பதை உங்கள் அரசு மறந்து விட்டதா, அல்லது அந்த மருத்துவர்களுக்கு அவர்கள் வழங்கும் சிகிச்சையின் போது எதிர்பாராத விதமாக சில நிகழ்வுகள் ஏற்படும்போது அதற்கு அவர்களைப் பொறுப்பாக்கி இத்தண்டனைச் சட்டத்தின் மூலம் "மோடி சர்க்காரின் பரிசு" என்று கூறி, சிறை தண்டனை வழங்குவது தான் உங்கள் நோக்கமா? என்று அறிய விரும்புகிறேன்.

இந்திய மருத்துவர்களின் சங்கம் சுமார் 4 லட்சம் உறுப்பினர்களை கொண்டது ஏற்கனவே இந்தச் சட்டத்திற்குத் தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கும் மருத்துவரின் தலைக்கு மேல் தூங்கிக் கொண்டிருக்கும் அரிவாளாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது.

வடசென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக உள்ள நான் மருத்துவத்தை தொழிலாக கொண்டவன், என்கிற நிலையில் இந்த தண்டனைச் சட்டத்தின் பிரிவிற்கு எனது கடும் எதிர்ப்பினை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த தண்டனைச் சட்டப் பிரிவு மருத்துவச் சேவை வழங்குவதில் உள்ள இடர்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் மருத்துவம் என்னும் தொழிலின் மருத்துவம் அறியாமல், நோயாளிகளுக்காக ஓய்வின்றி தன்னை அறியாமல் நோயாளிகளுக்காக தொண்டாற்றும் மருத்துவர்களின் அருஞ்செயல்களைப் புரிந்து கொள்ளாமல் உருவாக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவை வழங்கும்போது அறியாமல் ஏற்படும் தவறுகள் குற்றச் செயல்கள் என்று சொல்லுவது தவறாகும் என்பதை புரிந்து கொண்டு இந்தச் சட்டப் பிரிவை திருப்பி சரி செய்திடுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி கூறியுள்ளார்.

கழக மூத்த முன்னோடி - முன்னாள் மாவட்டச் செயலாளர்

சொ.காவேரி மணியம் துணைவியார் மறைவு!

முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம்- மாவட்டச் செயலாளர் கோ.தளபதி - மாவட்டக் கழக முன்னணியினர் அஞ்சலி

மதுரை, ஜூலை 10-

கழக மூத்த முன்னோடியும் மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளருமான சொ.காவேரி மணியம் அவர்களின் துணைவியார் கா.ராஜம்மாள் (வயது 88) நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சொ.காவேரி மணியம் அவர்கள் மதுரை மாவட்டத்தில் மதுரை எஸ். முத்து அவர்களோடு இணைந்து ஆரம்ப காலத்தில் கழகம் வளர்த்தவர். பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு மட்டுமின்றி மிசாவில் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் ஓராண்டு காலம் அடைக்கப்பட்டிருந்தவர்.

மிகவும் எளிமையானவர் மட்டுமின்றி கழகத் தோழர்களோடு மிகவும் எளிமையுடன் பழகி கழகம் வளர்த்தவர். மதுரை மாநகரிலுள்ள கட்சி அலுவலகமான மேயர் முத்து மன்றத்திற்கு தினந்தோறும் அவரது இல்லமான அவனியாபுரத்திலிருந்து பேருந்தில் பயணம் செய்து அலுவலகத்திற்கு வரக் கூடியவர்.

இப்படிப்பட்ட எளிமை

யான காவேரி மணியம் அவர்களை 1971ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியில் கழக வேட்பாளராக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து அவரை வெற்றி பெறச் செய்து சட்டமன்ற உறுப்பினராக்கினார். தொடர்ந்து மதுரை மாநகர் மாவட்டச் செயலாளராக நீண்ட காலம் இருந்தவர். இவர் சில ஆண்டுகளுக்கு முன்பு மறைவெய்தினார்.

இந்நிலையில் அவரது துணைவியார் கா.ராஜம்மாள் (வயது 88) நேற்று காலை அவனியாபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார்.

இச்செய்தியறிந்ததும் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, முன்னாள் அமைச்சர் பொன்.முத்துராமலிங்கம், முன்னாள் மாவட்டச் செயலாளர் வ. வேலுச்சாமி, முன்னாள் மேயர் பெ. குழந்தை வேலு உள்ளிட்ட மாவட்டக் கழக முன்னணியினர் அன்னாரது இல்லம் சென்று மறைந்த ராஜம்மாளுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அறிவிப்புகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில்

சுற்றுலாத் துறை அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்!

அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூலை 10 -

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நேற்று (8.7.2024) நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சுற்று லாத் துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

2024 -2025 சுற்றுலாத் துறை அறிவிப்புகள்

1. அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயப்பகுதி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை பகுதி, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம் தேவால யப்பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை ஆகிய வழிபாட்டு சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் ரூ. 8.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

2. திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள புல்லா வெளி அருவி, கொட்டுவரை அருவி மற்றும் கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள குட்லாடம்பட்டி அருவி மற்றும் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

3. கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரத்தில் உள்ள தொண்டி கடற்கரை, கன்னியாகுமரியில் சங்கு துறை, சொத்தவிளை கடற்கரை பகுதி, சூரிய காட்சி முனை மற்றும் தூத்துக்குடி மாவட்டம். காயல்பட்டினம் கடற்கரை பகுதிகளில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

4. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள அவதானப்பட்டி ஏரிப்பகுதி மேம்பாடு, திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரி மற்றும் திருவண்ணா மலை மாவட்டத்தில் தாமரைக்குளம் ஏரியில் படகு குழாம் மற்றும் இதர சுற்றுலாப் பணிகள் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

5. நீலகிரி மாவட்டத்தில் உல்லாடாவில் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்தல், கேத்தி மைனல்லா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை Hornbill பகுதியில் காட்சிமுனை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

6. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த அனுபவங்களை வழங்குதல், கலாச்சாரங்கள், பல்வேறு இயற்கை தலங்கள், பழங்கால மரபுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்தும் வகையில், பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் விதமாக பெருந்திட்டம் (Master Plan) ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட உள்ளது.

7. மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் (Medical and Wellness Tourism) சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் கோயம்புத்தூரில் பல்வேறு மருத்துவ தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவச் சுற்றுலா மாநாடு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்பட உள்ளது.

8. தமிழ்நாட்டில் நீர் சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பணிகளுக்கு ரூ.1.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

9. தஞ்சாவூர் மாவட்டம் புதுப்பட்டினம் கடற்கரை மற்றும் சென்னைக்கு அருகில் உள்ள பழவேற்காடு ஏரிப்பகுதி ஆகியவற்றில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ.1.00 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

10. தமிழ்நாட்டில் கிராமியச் சுற்றுலா (Rural Tourism) மற்றும் வான்நோக்கு சுற்றுலா (Astro Tourism) ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Study Report) ரூ. 50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

11. ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு மற்றும் பிற முக்கிய சுற்றுலா தலங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

12. தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை (Tamil Nadu Travel Mart) ரூ. 1.00 கோடி செலவில் சென்னையில் நடத்தப்படும் என மொத்தம் 12 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சுற்றுலாத்துறை அலுவலர்கள் அனைவரும் விரைந்து பணியாற்ற வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

வேலூர் தொகுதி கிரீன் சர்க்கிள்பகுதியில் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் சுரங்கபாதை அமையும் இடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று ஒன்றிய அரசிடம் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வலியுறுத்தியதையடுத்து இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில்

'முரசொலியில் தொண்டனின் பார்வையில் தமிழறிஞர்கள்' நூல்!

கோ.தளபதி எம்.எல்.ஏ. வெளியிடுகிறார்!

மதுரை, ஜூலை 10 -

மதுரை அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நடத்தும் "முரசொலியில் தொண்டனின் பார்வையில் தமிழறிஞர்கள் " நூல் அறிமுக விழா வருகின்ற (14.07.2024-ஞாயிறு) அன்று மாலை 5.30 மணிக்கு மதுரை மணியம்மை மழலையர் பள்ளி, வடக்கு மாசி வீதியில் நடைபெறுகிறது, மன்றத் தலைவர் என்.எம். மாரி தலைமை வகிக்கிறார்.

புரவலர் "அரிமா" மகா. கணேசன், க.வெ. நெடுஞ்சேரலாதன், டி.வி. அழகர்,

போடி காமராசு, மு. வெங்கடேசுவரன், லெ. முருகேசன், இல. வெள்ளைச்சாமி, ச. செல்வக்குமரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். துணைச் செயலர் கரு. ஆறுமுகம் வரவேற்கிறார். தொடக்கவுரை பி. வரதராசன் (தலைவர் புரட்சிக்கவிஞர் மன்றம்) தொடக்கவுரையாற்றுகிறார்.

இந்நூலை கோ. தளபதி எம்.எல்.ஏ. வெளியிடுகிறார். முன்னாள் மேயர் பெ. குழந்தைவேலு நூல் அறிமுகவுரையாற்றுகிறார். முனைவர் சுந்தர ஆவுடையப்பன் (மேனாள் நிகழ்ச்சி இயக்குனர் அகில இந்திய வானொலி)"வாழ்க்கை மரபிற்கு வள்ளுவம்" எனும் தலைப்பில் இலக்கிய பேருரையாற்றுகிறார்.

பேராசிரியர் இ.கி. இராமசாமி(மேனாள் தலைவர் தமிழ் உயராய்வு மையம் யாதவர் கல்லூரி), இரா. விசயராசன் (மாமன்ற மேனாள் உறுப்பினர்),

வீரகணேசன் (துணைச் செயலாளர் கலை இலக்கியப் பகுத் அறிவுப் பேரவை தி.மு.க.),இராம. வைரமுத்து (துணைப் பொதுச் செயலர் திராவிட இயக்கத் தமிழர் பேரவை), எஸ்.எஸ். அரு. வல்லபாய் மாவட்டச் சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் தி.மு.க.),"குறும்பா கவிஞர்" இரா. இரவிபுலவர் செயபால் சண்முகம் , வே. சான் கென்னடி ப. பாண்டித்துரை ரெ. கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். செயலர் கே.வி. இராமகிருட்டிணன் நன்றி கூறுகிறார்.

தஞ்சை தொகுதியில் முரசொலி எம்.பி. நன்றி தெரிவித்தார்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமை !

திருவாரூர், ஜூலை 10-

தஞ்சாவூர் தொகுதியில் வெற்றிபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தஞ்சை தொகுதிக்கு உட்பட்ட மன்னார்குடியில் வாக்காளப்பெருமக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தலைமையில், கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் தலைமையிலான நல்லாட்சிக்கு பரிசாக இந்தியா கூட்டணி போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றிக்கனியை பறித்தது. தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ச.முரசொலி எம்.பி. வாக்களர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கும் சுற்றுப்பயணம் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் மன்னார்குடி நகர பகுதிகளில் நடைபெற்றது .

நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு மன்னார்குடி நகரம் தேரடி நேதாஜிசிலை அருகே திருமஞ்சன வீதியில் தொடங்கிய இந்த நன்றி அறிவிப்பு சுற்றுப்பயணம் இரவு பழைய தஞ்சாவூர் ரஸ்தா காமாட்சி அம்மன் தெரு, இடத்தெரு, செல்லகா மாட்சி அம்மன் கோயில் தேரு பகுதிகளில் நிறைவடைந்தது.

இந்த சுற்றுப்பயணத்தில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நகர செயலாளர் வீரா.கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் மற்றும் நகர கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணியின் நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்வாக,சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி மாநகர இளைஞரணி சார்பில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஏற்பாட்டில் மேலப்பாளையம் பகுதி 46 வது வார்டு வாய்க்கால் பாலம் அருகில் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்வு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் துணை செயலாளர் அப்துல் கையூம், பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம், பாளை பகுதி அன்டன் செல்லத்துரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் வேங்கை வெங்கடேஷ் இனியன், காஜாமைதீன், ரம்சான் அலி,சிவா, கந்தன், சித்திக், மைக் மணி, மில் ஜே குமார், பத்மா, சௌந்தரம், ராஜேஸ்வரி, மகாராஜன், ஷெட்டி, அந்தோணி ராஜ், வழக்கறிஞர்கள் கரிம், சண்முகசுந்தர், பிரேம், முத்துகுமார் மற்றும் சிரிப்பு சேக், ஹமீம் முஸ்தபா, ஹவுஸ் மைதீன், அலி பக்ருதீன், அருள்ராஜ், சண்முகராஜா, மஸ்தான், உமர், ரகுமான்சா, திப்பு சுல்தான் சுப்ரித் சுப்பிரமணியன், சங்கர், வினோத் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு அம்மாபேட்டை

என்.பி.சேகர் தாயார் மறைவு!

ஈரோடு, ஜூலை 10-

ஈரோடு வடக்கு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம் முன்னாள் ஒன்றிய செயலாளரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான என்.பி.சேகர் மற்றும் தற்போதைய நெரிஞ்சிப்பேட்டை பேரூர் கழக செயலாளர் என்.பி.கண்ணன் ஆகியோரின் தாயாருமான திருமதி.பி.வள்ளியம்மாள் அவர்கள் நேற்று (09.07.2024) அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அம்மையாரின் இறுதிச்சடங்கு நேற்று பகல் 1.00 மணிக்கு நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பா. அம்பிகா

ஜூலை 10 (2017)

கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.

2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.